## நிதிய முகாமையாளரின் மீளாய்வு

### பொருளாதார மீளாய்வு

இலங்கையின் பொருளாதாரமானது 1Q2024 இல் கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ஒரு சாதகமான பொருளாதார நிலைமையினை அனுபவித்தது. இதன் பிரகாரம், பொருளாதாரத்தின் அனைத்து துறைகளினாலும் துணையளிக்கப்பட்டு 1Q2024 இல் பொருளாதாரமானது வருடத்திலிருந்து வருடம் 5.3%[1] ஆல் வளர்ச்சியடைந்தது. விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் துறையானது 1Q2024 இல் முறையே 1.1%[1], 11.8%[1], 2.6%[1] ஆல் விரிவடைந்தன. இந்த வளர்ச்சியானது குறைந்த மட்டத்திலான பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்களினாலும் மற்றும் அந்நிய நாணயச் சந்தைகளில் காணப்பட்ட அதிகரித்த திரவத்தன்மையினாலும் இயக்கப்பட்டது. உலக வங்கியின் எதிர்வுகூறலின் பிரகாரம், 2024 இல் இலங்கையின் பொருளாதாரமானது ஒரு மிதமான வளர்ச்சி வீதமான 2.2%[2] இனை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### வட்டி வீதச் சூழல்

மத்திய வங்கியானது 2024 இன் முதலாம் அரையாண்டின்போது தளர்வான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தொடர்ந்தும் பராமரித்தது. இதன் பிரகாரம், மத்திய வங்கியானது மார்ச் 2024 இல் அதன் கொள்கை வீதங்களை 50 அடிப்படை புள்ளிகளினால் குறைத்ததுடன் அதன் நிலையியல் வைப்பு வசதி வீதத்தையும் (SDFR) நிலையியல் கடன் வழங்கல் வீதத்தினையும் (SLFR) முறையே 8.5%[3] மற்றும் 9.00%[3] ஆக பராமரிப்பதற்கு தீர்மானித்தது. தளர்வான நாணயக் கொள்கைக்கு அமைய சந்தை வட்டிவீதங்கள் கீழ்நோக்கி செம்மையாக்கப்பட்டன. எவ்வாறாயினும், கடன் வழங்கல் வீதங்களிலான செம்மையாக்கல்கள் வைப்பு வீதங்களிலும் பார்க்க பலவீனமாகக் காணப்பட்டதுடன், இது சந்தையின் கடன் வழங்கல் வீதங்கள் மேலும் கீழ்நோக்கி செம்மையாக்கப்படுவதற்கான வாய்ப்பினை உருவாக்கியுள்ளது. மேலும், இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகளுக்கு பதில்செயலாக அரசாங்கப் பிணையங்களிலான விளைவுகள் கணிசமானளவு வீழ்ச்சியடைந்துள்ளன. கருத்திலெடுக்கப்பட்ட காலத்தின்போது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மிகக் குறைவான விரிவாக்கலை பதிவுசெய்தன. சந்தை கடன் வழங்கல் வீதங்கள் மேலும் குறைக்கப்படும்போது இது தனியார் துறைக்கான கடனின் வளர்ச்சிக்கு வசதியளிக்கும்.

### பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியினால் (CCPI,2021 = 100) அளவிடப்படும் தலைப்பு பணவீக்கமானது ஜூன் 2024 இல் 1.7%[3] ஆக நிறைவுசெய்தது. இதற்கு மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளிலான கீழ்நோக்கிய மீட்டலுடன் ஒப்பீட்டளவில் காணப்பட்ட பலவீனமான கேள்வி நிலைமைகளும் துணையளித்தன. ஜூன் 2024 இல் உணவுப் பணவீக்கமானது வருடத்திலிருந்து வருடம் 1.4%[3] ஆலும் உணவல்லாத பணவீக்கமானது வருடத்திலிருந்து வருடம் 1.8%[3] ஆலும் அதிகரித்தன. குறைவடைந்த மின்சாரக் கட்டணங்கள், குறைவான உள்ளூர் எரிபொருள் விலைகளுடன் குறைவான புள்ளிவிபரவியல் அடித்தளங்களின் கூட்டுத் தாக்கத்தின் காரணமாக எதிர்வரும் காலங்களில் பணவீக்கமானது இலக்குவைத்த மட்டங்களிலும் பார்க்க குறைவாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், மத்திய காலத்தின் மீது பணவீக்கமானது படிப்படியாக மத்திய வங்கியின் இலக்கான 5%[3] இனை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1 சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் (www.statistics.gov.lk)

2 உலக வங்கி பத்திரிகை வெளியீடு 02.04.2024

3 இலங்கை மத்திய வங்கி

### வெளிவாரித் துறை

வெளிவாரித் துறையின் செயற்திறனானது 2024 இன் முதலாம் அரையாண்டில் சாத்தியமாகக் காணப்பட்டது. ஓரளவு உயர்ந்த வர்த்தக நிலுவை காணப்பட்ட போதிலும், தொழிலாளர்களது உள்வாரி பணமனுப்பல்களின் அதிகரிப்பு மற்றும் சுற்றுலாத்துறையின் அதிகரித்த வருவாய் என்பன இதற்கு காரணியாயிருந்தன. ஜூன் 2024 இன் இறுதியில் சீனாவின் பீப்பள்ஸ் வங்கியுடனான பரிமாற்ற வணிகம் உள்ளடங்கலாக, உள்ளூர் அந்நியச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியின் கணிசமான தேறிய கொள்வனவுகளினால் துணையளிக்கப்பட்டு மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கமானது அமெரிக்க டொலர்கள் 5.6 பில்லியனாக[3] காணப்பட்டது. இக்காலப்பகுதியின்போது இலங்கை ரூபாயானது அமெரிக்க டொலருக்கு எதிராக 6.0%[3] ஆல் பெறுமதி உயர்வடைந்தது.

## CTCLSA பணச் சந்தை நிதியம் (ஆரம்பம்: 27 பெப்ரவரி 2012)

### நிதிய முகாமையாளர்

குகன் விநாயகசுந்தரம்

### நிதியத்தின் குறிக்கோள் மற்றும் அளவுகோல்

நிதியமானது 365 நாட்களுக்குள் முதிர்வடையும் முதலீட்டுத்தர பிணையங்களில் முதலீடு செய்யும் ஒரு திறந்த யுனிட் ட்ரஸ்ட் நிதியமாகும். நிதியத்தின் முதலீட்டுக் குறிக்கோள் ஒரு குறைவான மட்டத்திலான இடரைக்கொண்ட ஒரு பிணையங்கள் தேக்கத்தில் முதலீடுசெய்வதன் மூலம் ஒரு வருடாந்த வருமானத்தினை வழங்குவதாகும்.

### கருத்துரை

30 ஜூன் 2024 இல் நிறைவடைந்த காலத்திற்கு CTCLSA பணச் சந்தை நிதியமானது அதன் முதலீட்டாளர்களுக்கு ஒரு வருடாந்த விளைவாக 11.68%[1] இனை வழங்கியுள்ளது. நிதியமானது பிரதானமாக அரசாங்கப் பிணையங்களிலும் உயர் தரத்திலான நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்வதில் முன்னிறுத்தம் காட்டியது.

**காட்சிப்பொருள் 01: நிதியத்தின் விளைவு எதிர் அளவுகோல் விளைவு[4]**

| காலம் | GAMMF | NDBIB-CRISIL 91 Day T-Bill Index | GAMMF-Annualized* |
|---|---|---|---|
| 1H2024 | 5.81% | 6.29% | 11.68% |
| ஆரம்பத்திலிருந்து | 249.85% | 240.61% | 10.70% |

** செயற்திறன்கள் 30 ஜூன் 2024 இல் காணப்பட்ட மாத இறுதி விலைகளின் அடிப்படையிலாகும். இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திறன் தரவுகள் கடந்த காலத்து செயற்திறனை பிரதிநிதித்துவம் செய்வதுடன் இது எதிர்கால விளைவுகளுக்கான ஒரு உத்தரவாதமல்ல.*


மத்திய வங்கியானது 2024 இன் முதலாம் அரையாண்டின்போது தளர்வான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைப் பராமரித்தது. இதன் விளைவாக, மத்திய வங்கியானது மார்ச் 2024 இல் அதன் கொள்கை வீதங்களை 50 அடிப்படை புள்ளிகளினால் குறைத்ததுடன் ஜூன் 2024 இன் இறுதியில் அதன் நிலையியல் வைப்பு வசதி வீதத்தையும் (SDFR) நிலையியல் கடன் வழங்கல் வீதத்தினையும் (SLFR) முறையே 8.5%[3] மற்றும் 9.00%[3] ஆக பராமரித்தது. கொள்கை வீதங்களிலான குறைப்பிற்கேற்ப சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்தன குறிப்பாக, அரசாங்கப் பிணையங்களிலான விளைவுகள் வீழ்ச்சியடைந்தன. இதன் பிரகாரம், ஜூன் 2024 இன் இறுதியியல் 91 நாட்கள், 182 நாட்கள் மற்றும் 364 நாட்கள் திறைசேரி உண்டியல்களின் வட்டி வீதங்கள் முறையே 10.07%[3], 10.19%[3], 10.31%[3] ஆக காணப்பட்டன. அரசிறை அடிப்படையிலான வருமானத்தின் ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணமனுப்பல்கள் வடிவில் மேம்பட்ட வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களின் காரணமாக சந்தை திரவத்தன்மையானது மேம்படுத்தப்பட்டது.

கருத்திலெடுக்கப்படும் காலத்தின்போது நிதியமானது வீழ்ச்சியடையும் வட்டி வீதச் சூழலின் கீழ் நிதியத்தின் விளைவினைப் பராமரிப்பதற்காக அரசாங்கப் பிணையங்களிலான அதன் முதலீடுகளை அதிகரித்தது. அதேவேளை முதலீட்டுத் தர வரன்முறைகளை சந்திக்கும் நிலையான வைப்புகளிலும் அதன் முதலீடுகளைப் பராமரித்தது. இதன் பிரகாரம், ஜூன் 2024 இன் இறுதியில் அரசாங்கப் பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளில் நிதியத்தின் முதலீடுகள் முறையே 62.76%[4] மற்றும் 30.44%[4] ஆக காணப்பட்டன.


2024 இன் முதலாம் அரையாண்டில், நிதியமானது குறுங்கால கருவிகளில் முதலீடு செய்தது. இது எதிர்வரும் தேர்தல் சுழற்சியின் நிச்சயமற்ற தன்மையின் காரணமாக முன்னோக்கிய காலத்தில் வட்டி வீதங்களில் ஒரு மேல்நோக்கிய அழுத்தம் எழலாம் என்ற நம்பிக்கையினாலாகும்.

**நிதியத்தின் முக்கிய தகவல்கள்**

**நிதியத்தின் கடன் தரம் - தேறிய சொத்தின் %**





**சொத்து ஒதுக்கீடு**





30 ஜூன் 2024 இல் உள்ளவாறான நிதியத்தின் மொத்த தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,162.77[4] மில்லியன் ஆகும் என்பதுடன் நிதியத்தில் 402 அலகு உடைமையாளர்கள் காணப்பட்டார்கள். நிதியத்தின் அலகொன்றின் கொள்வனவு மற்றும் மீட்டல் விலையானது ரூபா 30.3797[4] ஆகும்.

**முதிர்வுத் தோற்றுருவம் - தே.சொ. %**




**கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் (கொ.ப.ப.) செயற்திறன் - 2024**




கொழும்பு பங்குச் சந்தையானது 2024 இன் முதலாம் அரையாண்டில், 2023 இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது சாத்தியமாகக் காணப்பட்டது. நிலையான வருமானச் சந்தையிலான வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய செம்மையாக்கலுடன் நிலையான வருமானப் பிணையங்கள் சந்தையிலிருந்து உரித்துவச் சந்தை நோக்கிய சொத்துக்களின் ஒதுக்கலானது மாற்றமடையலாம் என நாம் எதிர்பார்க்கின்றோம். மத்திய வங்கியின் கொள்கை வீதங்களின் தளர்த்தல் நிலைப்பாட்டுடன் உரித்துவச் சந்தைகள் உத்வேகம் அடைந்துள்ளன.

குறைவான வட்டி வீதங்கள் மற்றும் மேம்பட்ட பாரியபொருளாதார அடிப்படைகளினால் துணையளிக்கப்பட்டு பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு மீட்சியினை நாம் காண்கின்றோம். பெறுமதி சேர்த்தல் வரி (VAT) அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், சம்பள அதிகரிப்புச் சுற்றுக்கள் மற்றும் ஸ்திரமான பணவீக்க மற்றும் நாணய கண்ணோட்டத்தினால் துணையளிக்கப்பட்டு செலவழிக்கக்கூடிய வருமான மட்டங்கள் படிப்படியாக முன்னேற்றமடைந்து நுகர்வோர் கொள்வனவுகள் தாங்கத்தக்கதாக காணப்படும் என நாம் நம்புகின்றோம்.

இதன் பிரகாரம், ஜுன் 2024 இன் இறுதியில், அனைத்து பங்கு விலைச்சுட்டி (ASPI) 13.99%[1] அதிகரிப்பினைக் கண்டவேளை மிகவும் திரவத்தன்மையான S&P SL 20 சுட்டியானது 16.95%[5] ஆல் அதிகரித்தது. ஜுன் 2023 இல் அனைத்து பங்கு விலைச்சுட்டியும் S&P SL 20 சுட்டியும் முறையே 11.23%[2] மற்றும் 2.96%[6] ஆல் அதிகரித்திருந்தன.

5 செய்கைப் பத்திரம் - CTCLSA உரித்துவ நிதியம் - ஜுன் 2024

6 செய்கைப் பத்திரம் - CTCLSA உரித்துவ நிதியம் - ஜுன் 2023